**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 99/2022**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–2 வீரமலை திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 16.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வாதியை தெரியும். வாதி யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ராமசாமி மகன் மருதைக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். கன்னியம்மாள் யார் என்றால் மருதையின் மனைவி ஆவார். எனது மனைவி பெயர் பாப்பாத்தி. பாப்பாத்தியின் உடன் பிறந்தவர் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதி தங்கை கணவர் என்றால் சரிதான். நாங்கள் தனித்தனியாக வசிக்கிறோம். நான் உள்ளூரில் தான் வசிக்கிறேன். எனது வீட்டின் கதவு எண்.7/29 ஆகும். 1ம் பிரதிவாதியின் வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதியும் அதே ஊரில் தான் வசிக்கிறார்.

2) வாதிக்கு அவர் குடியிருக்கும் ஊரில் எவ்வளவு சொத்துக்கள் பாத்தியம் என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. எத்தனை அயிட்டத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஒரு அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண்.931/11 தாவா சொத்தின் பைமாஷ் எண் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.931/11 ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சங்கன் மகன் பொன்னன், வள்ளியம்மைக்கு பாத்தியப்பட்டது. எவ்வளவு ஏக்கருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் 60 செண்டிற்கு தாக்கல் செய்துள்ளார்.

3) 1வது அயிட்ட சொத்து பாதைக்கு வடபுறமும், 2ம் அயிட்ட சொத்து பாதைக்கு தென்புறமும் உள்ளது. பாதைக்கு வடபுறம் உள்ள சொத்து 60 சென்ட், பாதைக்கு தென்புறம் உள்ள சொத்து ஒரு ஏக்கர் 10 சென்ட், சர்வே எண்.936/9. ஒரு ஏக்கர் 10 சென்ட் நிலத்தை வாதிகள், மருதை, ரத்தினம் அனுபவிக்கின்றனர் என்றால் சரிதான். அவர்கள் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். யார் அனுபவம் செய்கிறார்களோ அவர்களுக்கு தான் பட்டா வழங்குவார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.931/11க்கு வாதிகள் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை, ராமசாமி, பிச்சை ஆகியோர்கள் பெயரில் பட்டா உள்ளது. ராமசாமி, பிச்சைக்கு மேற்படி சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் அது பற்றி தெரியாது.

4) சர்வே எண்.931/11க்கு வாதியின் பெயரில் பட்டா தாக்கல்

செய்துள்ளார்களா என்றால் அது பற்றி தெரியாது. சர்வே எண்.931/9 க்கு கிழக்கே யாருடைய நிலம் என்றால் மானிய நிலம் உள்ளது. சர்வே எண்.931/11 க்கு கிழக்கே யாருடைய நிலம் என்றால் நத்தம் புறம்போக்கு நிலம் உள்ளது யார் அனுபவம் செய்கிறார்கள் என்றால் தெரியாது. சர்வே எண்.931/11 க்கு வடக்கே பொரக்கிலான் மகன் சங்கனுக்கு பாத்தியப்பட்டது. மேற்கே யார் நிலம் என்றால் தெரியாது. தெற்கே சர்வே எண்.936/9 உள்ளது. உயர்நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் நான் தரப்பினரா என்றால் இல்லை. உயர்நீதிமன்ற வழக்கில் யாருக்கு சாதகமானது என்றால் தெரியாது. உயர்நீதிமன்றத்தில் யார் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ராமசாமி மகன் மருதை தாக்கல் செய்துள்ளார்.

5) தாவா சொத்தில் வாதிகள் தான் 2003 வருடம் முதல் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகின்றனர். பிரதிவாதிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தில் நான்கெல்லை விபரமும் தெரியவில்லை என்றும் பிரதிவாதிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**